**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 13.04.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்**
**ஆராய்ச்சிக்கான மூலதன நிதியை அதிகரிக்க புதிய முயற்சிகள்**

ஆராய்ச்சி மூலதன நிதியானது கல்வி நிறுவனங்களில் தரமான ஆராய்ச்சி திட்டங்களை ஊக்குவிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது. முன்னாள் மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தால் பயன்பெறும் நிறுவனங்கள் இந்த நிதிக்கு பங்களிப்பதை தங்களது பெருமையாக கருதுகின்றனர். கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர். வெ. கீதாலட்சுமி அவர்கள், கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் திட்டங்களுக்கு தேவையான மூலதன நிதியை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். இம்முயற்சியைப் பாராட்டி, தமிழ்நாடு அரசு தனது பங்களிப்பாக ரூ.100 கோடியை பல்கலைக்கழக ஆராய்ச்சி மூலதன நிதிக்கு ஒதுக்குவதாக 2023-24ம் ஆண்டுக்கான விவசாய பட்ஜெட்டில் அறிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளிடமிருந்து பெருமளவில் நிதி திரட்டும் முயற்சிகளை துணைவேந்தர் தலைமையில் பல்கலைக்கழகம் செயல்படுத்துகின்றது.

இந்த முயற்சியின் பலனாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முன்னோடி விஞ்ஞானி முனைவர் ராமையா அவர்களின் நினைவாக அவரது மகன் திரு. இரா. பஞ்சரத்தினம் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மேம்பாட்டுக்காக ரூ.5 கோடியை ஆராய்ச்சி மூலதன நிதியாக வழங்கியுள்ளனர். இதற்கான காசோலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களிடம் 12.04.2023 அன்று வழங்கியுள்ளனர்.

முனைவர் ராமையா உலக அளவில் புகழ்பெற்ற நெல் இனப்பெருக்க ஆராய்ச்சியாளர் ஆவார். இவருக்கு இந்திய அரசானது 1957ம் ஆண்டு பத்மஸ்ரீ விருது மற்றும் 1970ம் ஆண்டு பத்மபூஷன் விருதுகள் வழங்கி கவுரவித்துள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்தான் இந்தியாவிலேயே முதன்முறையாக நெல் ஆராய்ச்சி மையம் 1912ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இங்கு சுமார் 24 ஆண்டுகள் (1914-1938) ஆராய்ச்சியாளராக தனது அளப்பரிய பணியை வழங்கியுள்ளார்.

இவர் உருவாக்கிய கிச்சலி சம்பா (GBE 24) என்ற நெல் இரகத்தைக் கொண்டு உலகம் முழுவதும் 83 புதிய நெல் இரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இத்தகைய புகழுக்குரிய முனைவர் இராமையா அவர்களின் நினைவாக பல்கலைக்கழகத்தில் 2019ம் ஆண்டு உருவாக்கப்பட்ட விதை வங்கிக்கு இராமையா விதை வங்கி என்று பெயரிட்டு பெருமைப்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் முனைவர் ராமையாவின் குடும்பத்தினரின் பங்களிப்புக்கு தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தார். இந்தத் தொகையானது பல்கலைக்கழக ஆராய்ச்சி மூலதன நிதியில் பராமரிக்கப்பட்டு, கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் என்று தெரிவித்தார். மேலும் அதில் கிடைக்கும் வட்டியானது, புதுமையான ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதற்கும், மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கும் பயன்படுத்தப்படும் என்று தெரிவித்தார். ஆராய்ச்சி மூலதன நிதியை பெருக்குவதற்கும் பல்கலைக்கழகம் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் துணைவேந்தர் கூறினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**